2012 மே 8]

(இ) காஞ்சிபுரம் மாவட்டம், வனத் தோட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வழங்கப்பட்ட சத்துணவினால் மாணவர்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கென்ன டெங்கு காய்ச்சலா? (சிரிப்பு)*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *டெங்கு காய்ச்சல் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்பு . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்று நீங்கள் அவையிலே இல்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் அந்தப் பிரச்சினையை எழுப்பி அமைச்சர் அதற்கு பதில் சொல்லிவிட்டாரென்று நினைக்கிறேன். நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும்; கொடுக்கவில்லை. தயவுசெய்து என்ன என்று சொல்லுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம் வனத் தோட்டத்திலே அமைந்திருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலே மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட சத்துணவிலே, குண்டூசி, எலிப் புழுக்கை போன்றவை கிடந்து 70 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு சிறப்பான முறையிலே சத்துணவு அளிக்க வேண்டுமென்று திட்டம் தீட்டினாலும், சத்துணவு அமைப்பாளர்களுடைய கவனக் குறைவினால் இது போன்ற நிகழ்வுகள் நடப்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கவனத்தை ஈர்க்கிறேன்.*

(ஈ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து, இன்னும் அந்தப் பேச்சு வார்த்தை முடிவுக்கு வராமல் இருக்கின்றது. அதன் காரணமாக அவர்களும் பாதிக்கப்பட்டு, கரும்பு விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து அதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.*

(அ) நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக என்.எல்.சி. தொழிலாளர்களுடைய* strike *நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசு தொழிலாளர் ஆணையத்தின்மூலமாக இதைப் பற்றிப் பேசுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு மேற்கொண்டு அந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு கடந்த காலத்தில் ஆண்டு கொண்டிருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, இதுபற்றிக் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் மத்திய அரசில் அங்கம் வகித்தாலும்கூட, இன்றைக்கு என்.எல்.சி. தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால், அவர்கள் குரல் கொடுக்கவே இல்லை.*

இன்றைய காலைப் பத்திரிகையில்கூட தொழிலாளர் நலத்தைப் பற்றிக் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசினுடைய தலைவர் முதலைக் கண்ணீர் வடிக்கிறார். ஆனால், அவர் அங்கம் வகிக்கின்ற மத்திய அரசு இதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. ஆனாலும்கூட மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு உடனடியாக மத்திய அரசை வலியுறுத்தும் என்று உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*